செய்தி வெளியீடு: 52 நாள்.17.06.2021

இன்று (17.06.2021) சென்னை மாவட்டம் மயிலாப்பூர் வட்டாச்சியர் அலுவலத்தில் சென்னை மாவட்டஆட்சித்தலைவர் திருமதி.டாக்டர்.ஜெ. விஜயாராணி,இ.ஆ.ப அவர்கள் திடிர் ஆய்வு மேற்கொண்டார்.

------

மயிலாப்பூர் வட்டாச்சியர் அலுவலகத்தில் சென்னை மாவட்டஆட்சித்தலைவர் திருமதி.டாக்டர்.ஜெ.விஜயாராணி,இ.ஆ.ப., அவர்கள் திடிர் ஆய்வு மேற்கொண்டு நிலுவையில் உள்ள பல்வேறு மனுக்கள்மீதும் இணையவழி வாயிலாக விண்ணப்பித்த விண்ணப்பங்கள் குறித்தும் பட்டா சம்மந்தமான மேற்கொள்ளபட்ட நடவடிக்கை குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வு நடவடிக்கை மேற்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.டாக்டர்.ஜெ.விஜயா ராணி,இ.ஆ.ப., அவர்கள் நேரடியாக பெறப்பட்ட மனுதாரர் திருமதி.லகஷ்மி அம்மாள் அவர்கள் பட்டா பெயர் திருத்தம் சம்பந்தமாக பெறப்பட்ட மனுவின்மீது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வருவாய் கோட்டாசியர் மற்றும் வட்டாச்சியர் அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனை தொடர்ந்து காமராஜ்சாலையில் அமைந்துள்ள அரசுக்கு சொந்தமான நிலத்தினில் வட்டார போக்குவரத்து அலுவலக நில ஒதுக்கீடு செய்வது தொடர்பான புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், துவாரகா நகரில் வசிக்கும் திரு.அக்கையா என்பவரது வாரிசு சான்று விண்ணப்பத்தின்மீது நேரடியாக மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வின்போது வருவாய்கோட்டாசியர் மயிலாப்பூர் வட்டாசியர் ஆகியோர் உடன் இருந்தனர்

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை - 01